*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*23 12 2025       TUESDAY 12 40 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

***தலைப்புச் செய்திகள்***

1. **நாட்டின் பாதுகாப்பிற்காக, புலனாய்வு அமைப்பு சிறப்பாக செயல்பட்டு வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.**

2. **செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத் துறையில் இந்தியா முன்னணி நாடாக திகழ்வதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.**

3. **முன்னாள் பிரதமர் சௌத்ரி சரண்சிங்கின் பிறந்த நாள் தேசிய விவசாயிகள் தினமாக இன்று கடைபிடிக்கப்படுகிறது.**

4. **Ditwah புயலால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு, 45 கோடி டாலர் நிதியுதவியை இந்தியா வழங்கும் என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.**

5. **ரஷ்யா மீதான பொருளாதார தடையை ஆறு மாதங்களுக்கு ஐரோப்பிய யூனியன் நீட்டித்துள்ளது.**

>>>>><<<<<

**நாட்டின் பாதுகாப்பிற்காக, புலனாய்வு அமைப்பு சிறப்பாக செயல்பட்டு வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.**

**புதுதில்லியில் புலனாய்வு அமைப்பு தொடர்பான நிகழ்ச்சியில் பேசிய அவர், கடந்த பத்தாண்டுகளில் புலனாய்வு அமைப்பு போன்ற பாதுகாப்பு முகமைகள், நாட்டின் இறையாண்மையை பாதுகாக்க சிறப்பாக செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.**

**உள்நாட்டு பாதுகாப்பிற்கும் புலனாய்வு அமைப்பு சிறப்பான பங்களிப்பை வழங்கி வருவதாக திருமதி. திரௌபதி முர்மு கூறினார்.**

*இந்நிகழ்ச்சியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இணையமைச்சர் திரு. Bandi Sanjay Kumar, மத்திய உள்துறை செயலர் திரு. கோவிந்த் மோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

*>>>>><<<<<*

*செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத் துறையில் இந்தியா முன்னணி நாடாக திகழ்வதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.*

*புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பள்ளி - கல்லூரி பாடத்திட்டங்களில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று கூறினார்.*

*வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மிகவும் இன்றியமையாதது என்றும், சுயசார்பு இந்தியாவை உருவாக்க இது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.*

*செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துறையின் மேம்பாட்டிற்காக 10 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இத்துறையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மூலம் இந்தியா முன்னேறி வருவதாகவும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறினார்.*

*>>>>><<<<<*

*மறைந்த முன்னாள் பிரதமர் சௌத்ரி சரண்சிங்கின் பிறந்த நாள் இன்று தேசிய விவசாயிகள் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.*

*இந்நாளையொட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள சமூகவலைதள பதிவில், ஏழை எளிய மக்கள் மற்றும் விவசாயிகளின் நலனுக்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் சௌத்ரி சரண்சிங் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*நாட்டின் வளர்ச்சிக்கான அவரது பங்களிப்பை நினைவுகூர்வதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் வெளியிட்டுள்ள பதிவில், சுயசார்பு இந்தியாவை உருவாக்க சௌத்ரி சரண்சிங்கின் கொள்கைகள் உத்வேகம் அளிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*மத்திய உணவுத்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி விடுத்துள்ள செய்தியில், நாட்டின் உணவு பாதுகாப்பிற்காக பாடுபடும் விவசாயிகளை இந்நாளில் போற்றுவோம் என்று தெரிவித்துள்ளார்.*

*விவசாயிகளின் நலனுக்காக மத்திய அரசு பிரதமரின் விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டம், பிரதமரின் பயிர் காப்பீடு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அமைச்சர் கூறியுள்ளார்.*

*>>>>><<<<<*

*Ditwah புயலால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு, 45 கோடி டாலர் நிதியுதவியை இந்தியா வழங்கும் என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.*

*கொழும்புவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதில் 35 கோடி டாலர் கடனுதவியாக வழங்கப்படும் என்று கூறினார்.*

*புயலால் பாதிக்கப்பட்ட இலங்கையின் சீரமைப்பு பணிகளுக்காக அளிக்கப்படும் இந்த நிதி, வீடுகளை கட்டவும், ரயில், சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கும் பயன்படுத்தப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.*

*முன்னதாக, டாக்டர் ஜெய்சங்கர், இலங்கை அதிபர் திரு. அனுரகுமார திசநாயகே-யை சந்தித்து புயல் பாதிப்புகள் குறித்து விரிவாக ஆலோசனை மேற்கொண்டார்.*

மேலும், இலங்கையின் சீரமைப்பு பணிகளுக்காக இந்தியா தொடர்ந்து உதவி செய்யும் என்பதை வலியுறுத்தும் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் கடிதத்தையும் அவர் வழங்கினார்.

ஆப்பரேஷன் சாகர்பந்து திட்டத்தின் கீழ், இந்தியா – இலங்கைக்கு ஆயிரத்து 100 டன் நிவாரணப் பொருட்களையும், 14 டன் மருந்து பொருட்களையும் வழங்கியுள்ளதாக டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

>>>>><<<<<

முன்னாள் பிரதமர் நரசிம்ம ராவின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, மத்திய அமைச்சர்கள் திரு. நிதின் கட்கரி, திரு. சிவராஜ் சிங் சௌஹான் உள்ளிட்டோர் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்ட தலைவர்களும் நரசிம்ம ராவுக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

>>>>><<<<<

மத்திய அமைச்சரும், பிஜேபியின் தமிழக தேர்தல் பொறுப்பாளருமான திரு. பியூஷ் கோயல் சென்னையில் இன்று அஇஅதிமுக உள்ளிட்ட தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிப் பிரதிநிதிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

முன்னதாக, சென்னை விமான நிலையம் வந்த அவரை, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், தமிழக பிஜேபி மேலிட தேர்தல் பொறுப்பாளர் திரு. அரவிந்த் மேனன், மேலிட இணை பொறுப்பாளர் திரு. சுதாகர் ரெட்டி உள்ளிட்டோர் வரவேற்றனர்.

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கத்திற்கு ஒரு லட்சத்து 51 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யவுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

*அவர் காணொலி மூலம் விடுத்துள்ள செய்தியில், இந்த இயக்கம் மூலம் கிராமப்புற மக்களுக்கு 125 நாட்கள் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கூறினார்.*

>>>>><<<<<

*மேற்குவங்கத்தில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை, தேர்தல் ஆணையத்தின் உயர்மட்டக் குழு இன்று ஆய்வு செய்கிறது.*

*தேர்தல் ஆணையத்தின் முதன்மை செயலர் திரு. S.B. Joshi, துணைச் செயலர் திரு. Abinav Agarwal அடங்கிய குழு, நாளை கொல்கத்தாவில் நடைபெறும் நுண்பார்வையாளர்களுக்கான பயிற்சி கூட்டத்தில் பங்கேற்கிறது.*

*மேற்குவங்கத்தில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியின் விடுபட்ட 10 லட்சம் வாக்காளர்களுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளதாகவும், மேலும் 25 லட்சம் வாக்காளர்களுக்கு இன்று முதல் நோட்டீஸ் அனுப்பப்போவதாகவும் மாநில தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.*

>>>>><<<<<

*கேரளா, மத்தியப் பிரதேசம், சத்திகட் மாநிலங்கள் மற்றும் அந்தமான் நிகோபார் தீவுகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் முடிவடைந்ததை அடுத்து. வரைவு வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது.*

*தலைமைத் தேர்தல் அதிகாரிகளும், மாவட்ட தேர்தல் அதிகாரிகளும் வரைவு வாக்காளர் பட்டியலை, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளிடம் வழங்கவுள்ளனர்.*

*மேலும் இதுதொடர்பான விவரங்கள், தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்படவுள்ளது.*

>>>>><<<<<

*பங்களாதேஷில் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களுக்கு ஐ.நா பொதுச்செயலர் திரு. அன்டோனியோ குட்ரஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*பங்களாதேஷில் சிறுபான்மையினர் மீது வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில், ஐ.நா இதுகுறித்து கவலை தெரிவித்துள்ளது.*

*>>>>><<<<<*

*பங்களாதேஷில் Dipu Chandra Das என்ற 25 வயது இளைஞர் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு, நியூயார்க் மாகாண உறுப்பினர் திருமதி. ஜெனிஃபர் ராஜ்குமார் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*சிறுபான்மையினருக்கு எதிரான கலவரத்தை அந்நாட்டு அரசு தடுக்க தவறிவிட்டதாக அவர் குற்றம் சாட்டினார்.*

*கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் நடப்பாண்டு ஜூலை வரை சிறுபான்மையினருக்கு எதிராக 2 ஆயிரத்து 442 வன்முறைச் சம்பவங்கள் நடந்துள்ளதாக திருமதி. ஜெனிஃபர் ராஜ்குமார் சுட்டிக்காட்டினார்.*

*>>>>><<<<<*

*ரஷ்யா மீதான பொருளாதார தடையை ஆறு மாதங்களுக்கு ஐரோப்பிய யூனியன் நீட்டித்துள்ளது.*

*கடந்த 2014ஆம் ஆண்டு முதல் ஐரோப்பிய யூனியன் ரஷ்யா மீது பொருளாதார தடையை விதித்துள்ளது.*

*பின்னர், 2022 பிப்ரவரி மாதத்திலிருந்து இந்த தடை நீட்டிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸெல்சில் நடைபெற்ற ஐரோப்பிய யூனியன் கவுன்சில் கூட்டத்தில், பொருளாதார தடையை நீட்டிக்க முடிவடுக்கப்பட்டது.*

*வர்த்தகம், நிதி, எரிசக்தி, தொழில்நுட்பம், போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்த பொருளாதார தடை அடுத்த ஆண்டு ஜூலை 31ஆம் தேதிவரை நீட்டிக்கப்படும் என்று ஐரோப்பிய யூனியன் கவுன்சில் அறிவித்துள்ளது.*

*>>>>><<<<<*

*நேபாளத்தில் அடுத்த ஆண்டு மார்ச் 5ஆம் தேதி, பொதுத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், 10 லட்சம் பேர் புதிதாக, வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.*

*கடந்த 2022ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 1 கோடியே 81 லட்சம் பதிவு செய்த வாக்காளர்கள் இருந்ததாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.*

*வரும் சனிக்கிழமை இறுதிவாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*நேபாளத்தில் பதிவு செய்த அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 87லிருந்து 114ஆக அதிகரித்துள்ளதாகவும் அந்நாட்டு தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.*

*>>>>><<<<<*

*வட மாநிலங்களில் கடும் பனி நிலவுவதால், புதுதில்லி உள்ளிட்ட பல்வேறு நகரங்களில், விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.*

*புதுதில்லி விமான நிலையத்தில் 10 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், 270 விமானங்கள் தாமதமாக இயக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*இந்தியா - இலங்கை இடையிலான இரண்டாவது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.*

*இப்போட்டி விசாகபட்டினத்தில் இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.*

*5 போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இந்தியா 1-0 என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலையில் உள்ளது.*

*>>>>><<<<<*

*ராஞ்சியில் நடைபெற்று வரும் சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டியில், இன்று தில்லி அணி 2-0 என்ற கோல்கணக்கில் பீகார் அணியை வென்றது.*

*>>>>><<<<<*